*கவனிக்க.- 2020.07.17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2186 - 2020 ජූලි මස 24 වැනි සිකුරාදා - 2020.07.24**

*2186 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி III - காணிகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 140 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 141 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2020, ஓகத்து மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, யூலை மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்காணி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


139 - B 082042 - 353 (2020/07)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*சப்பிரகமுவ மாகாண சபையின் கேகாலை மாவட்டத்தில், ரம்புக்கனை பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் டபிள்யூ. எல். ஆர். இந்திக்க லியனகே ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் ஆளுநர் அவர்களினால் 1960 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி அளிப்புச் செய்யப்பட்டுள்ள ஆர் 6203 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான கஹகொல்லாவலகுடியேற்றத்தில்வசிக்கும்புலிஹிங்குமுதியன்சேலாகேநோனம்மா என்பவருக்குகையளிக்கப்பட்டு, கேகாலை மாவட்ட காணிப்பதிவகத்தில் ஆர். 6203 ஆம் இலக்கத்தின் கீழ் 1960.08.30 ஆந் ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக உரித்தாளர் ஒருவர் இன்மையினால் அல்லது உரித்தாளர் ஒருவர் இருந்தும் அவர் பின்னுரித்தாளராவதற்கு விரும்பாத காரணத்தினால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளமையினால் குறித்த அளிப்புப்பத்திரத்தை, மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இத்தால் அறிவித்தல் செய்கின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2020.08.21 ஆந் திகதிக்கு முன் எனக்கு எழுத்துமூலம் தெரிவித்தல் வேண்டும்.*

### அட்டவணை

*கேகாலை நிர்வாக மாவட்டத்தில் ரம்புக்கனை பிரதேச செயலாளர் பிரிவில் கல்பொட மற்றும் கிணிகொட கோரலவில், வல்கம் பத்துவில் தொம்பேமட (மேற்கு) கிராம அலுவலர் பிரிவில் தொம்பேமட எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், கேகாலை நில அளவை அத்தியட்சகரின் பொறுப்பில் இருக்கின்ற நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இறுதி கிராம வரைபட இலக்கம் 132 இல் களப்பத்திரம் 02 இல் காணித்துண்டு இலக்கம் 259 கொண்ட 00 ஏக்கர் 03 றூட் 02 பேர்ச் விஸ்தீரணம் உள்ளதுமான கீழே காட்டப்பட்டுள்ளவாறு எல்லைகளுக்குட்பட்டதுமான அரச காணி கஹகொல்லாவல காடு,*

*வடக்கு : இ. கி. வரைபடம் 132 இல் காணித்துண்டு இலக்கம் 248 மற்றும் 249 ;*
*கிழக்கு : இ. கி. வரைபடம் 132 இல் காணித்துண்டு இலக்கம் 240 எனும் குடியேற்ற வீதி ;*
*தெற்கு : இ. கி. வரைபடம் 132 இல் காணித்துண்டு இலக்கம் 269 ;*
*மேற்கு : இ. கி. வரைபடம் 132 இல் காணித்துண்டு இலக்கம் 258.*

டபிள்யூ. எல். ஆர். இந்திக்க லியனகே,
பிரதேச செயலாளர்.

*பிரதேச செயலகம்,*
*ரம்புக்கனை,*
*2020, யூலை 30.*

*07-698*

---

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*இலங்கை மகாவலி அதிகார சபையின் வலவ வலயத்தின் வதிவிடக் கருத்திட்ட முகாமையாளரான இம்புல்கொட கமகே அமரசிரி ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(04) ஆவது உபபிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் 2000, திசெம்பர் 02 ஆந் திகதி கையளிக்கப்பட்டுள்ள இலக்கம் ஹ/உவ/அங்கு/பிர/1322 (நீர்ப்பா) ஐ உடைய கொடைப்பத்திரத்தின் உரிமையாளரான ஆரச்சி கெதர, பட்டஅத, ஹுங்கமவில் வசிக்கும் தொன் ஹெந்திஸ் ஜயசேகர சமரவிக்கிரமவுக்குக் கையளிக்கப்பட்டு அம்பாந்தோட்டை காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் அம்/14/459/2001 இன் கீழ் 2001.02.12 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ள கீழேயுள்ள உப ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியில் உரிமையாளரொருவர் இல்லாததால்*

அல்லது சட்ட ரீதியில் உரிமையாளரொருவர் இருப்பினும் அவர் பின்னுரிமையாளராவதற்கு விரும்பாததால் பின்னுரிமைத் தன்மைக்கு எவருமில்லையெனப் பதிவாகியிருப்பதால் அவ் வழங்கல் பத்திரத்தை மேற்குறித்த சட்டத்தின் (104) ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பில் ஏதேனும் எதிர்ப்புகள் காணப்பட்டால் அதனை 2020.08.14 ஆந் திகதிக்கு முன் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில், அங்குனுகொலபெலெஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின் கிழக்கு கிருவாபத்துவையின்/கோரலையின் பட்டஅத வடக்கு கிராம அலுவலர் பிரிவின், பட்டஅத எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகத்திடம் உள்ளதும், நிலஅளவையாளர் நாயகத்தின் மூலம் திரட்டப்பட்ட இலக்கம் அ. க. பி. 456/11 ஐ உடைய வரைபடத்தின் இலக்கம் 692 ஐ உடைய காணித்துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், விஸ்தீரணத்தில் 0.662 ஹெக்டயார் அளவுள்ளதும், கீழே காட்டப்பட்டுள்ளவாறு எல்லைக்குட்படுத்தப்பட்டதுமான அரச காணி,

வடக்கு : அ. க. பி. 455 ஐ உடைய பல்லேகனுகெட்டிய கிராம எல்லை மற்றும் 688 ஐ உடைய கால்வாய் ஒதுக்கீடு ;

கிழக்கு : இலக்கம் 693 ஐ உடைய காணி மற்றும் 695 ஐ உடைய கால்வாய் ஒதுக்கீடு ;

தெற்கு : இலக்கம் 691 ஐ உடைய காணி, 695 ஐ உடைய கால்வாய் ஒதுக்கீடு மற்றும் 690 ஐ உடைய கால்வாய் ஒதுக்கீடு ;

மேற்கு : இலக்கம் 690 ஐ உடைய கால்வாய் ஒதுக்கீடு மற்றும் 688 ஐ உடைய கால்வாய் ஒதுக்கீடு.

ஏ. எல். ஒஸ்மன் த சில்வா,
வதிவிடக் கருத்திட்ட முகாமையாளர் (வலவ).

இலங்கை மகாவெலி அதிகார சபை,
வலவ விசேட ஆளுகைப் பிரதேசம்,
எம்பிலிப்பிட்டிய,
2020, சனவரி 22.

07-714

---

## நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/62071.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : யூபீஎல்சீ/எல்/06/பிரீ/எல்/60.

### முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மொனராகலை மாவட்டம், புத்தள பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோன்கெடிய எனும் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கோன்கெட்டிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எப்பிபி 51 ஆம் இலக்க வரையப்பட்ட சுமாரான சுவட்டு வரைபடத்தில் 17 ஏக்கர் 02 றூட் 21.45 பேர்ச்சஸ் விஸ்தீரணமுடைய அரச காணியை கறுத்தக் கொளம்பான் மாம்பழச் செய்கை விவசாய நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டு திரு. சன்தன திஸ்ஸ காமினி விஜேரத்ன என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : தித்தவெல் ஆர ஒதுக்கு ;

கிழக்கு : டி. எம். ரத்னாயக, எச். எம். சோமவதி, எம். டபிள்யூ. ரஜித சதுரங்க என்பவர்களின் காணிகள் ;

தெற்கு : டி. எம். பியசேன, கசுன் பபசர் விஜேரத்ன என்பவர்களின் காணிகள் ;

மேற்கு : பழைய கதிர்காமம் பாதைக்கான ஒதுக்கு மற்றும் கே. எச். அனுர கித்சிரி, எல். ஏ. வீ. ஷாலிகா இந்ராணி விஜேரத்ன என்பவர்களின் காணிகள்.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சர் குத்தகையில் வழங்க அனுமதித்த 2020.06.03 ஆந் திகதியிலிருந்து முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- 2020 ஆம் வருடத்திற்கான காணியின் விலை பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட காணியின் பெறுமதியானது ரூபா ஐந்து மில்லியனைவிட (ரூபா 5,000,000.00) குறையும் சந்தர்ப்பங்களில், காணியின் அபிவிருத்தி அடையாத 2% 2020 ஆம் வருடத்திற்கான விலை மதிப்பீடு ரூபா ஐந்து மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பத்தில், காணியின் அபிவிருத்தி அடையாத 4% வருடாந்தக் குத்தகைக்காக கொடுபட வேண்டும். இந்த குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தப்படும் என்பதுடன், திருத்தப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருட காலப்பகுதியில் இறுதி வருடத்தில் செலுத்தப்பட்ட குத்தகைப் பணத்தின் 20% வட்டி வருடாந்த குத்தகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

தவணைப்பணம்.- அறவிடப்படமாட்டாது.

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி விவசாய நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(ஊ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) மாண்புமிகு அமைச்சர் அங்கீகரித்த திகதியிலிருந்து 05 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப்பட மாட்டாது ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04.இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரித்த தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

சமீர பி. ஹெட்டி ஆராச்சி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, யூலை 24.

07-712